**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW1 Examined as PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | நமச்சிவாயம் | Caste: | |
| Father's name | சின்னத்தம்பி | Calling: | விவசாயம் |
| Village | மனவாத்திப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | பெருங்களூர், புதுக்கோட்டை தாலுகா. | Age: | 42 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05/04/2023.

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். மற்ற இரண்டு எதிரிகளையும் எனக்கு தெரியும். 27.03.2021ம் வருடம் மாலை சுமார் 4.30 மணியளவில் என் அண்ணன் பெருமாளும், அவரது மகனும் டிராக்டரில் வயலில் உழுது கொண்டிருந்தார்கள். அப்போது சின்னு, கருப்பையா இருவரும் என் அண்ணனை பார்த்து ஓயி, ஓத்தோ எங்கடா இங்கு வந்து உழுகிறாய் என்று அசிங்கமாக பேசி, விரட்டி மண்வெட்டி பிடியால் என் அண்ணன் பெருமாளை கருப்பையாவும், சின்னுவும் அடித்துவிட்டார்கள். நான் தடுக்க சென்றபோது என்னையும் மண்வெட்டி பிடியால் தோள்பட்டையிலும், காலிலும் சின்னுவும், கருப்பையாவும் அடித்தார்கள். சின்னுவின் மனைவி சிலம்பாயி, அவருடைய மகள் இருவரும் சாண்டகுடிக்கி எங்கடா இங்கு வந்து வம்புழுக்குறிங்க, அவர்களை வெட்டி புதைங்கடா என்று மிரட்டினார்கள். கருப்பையா என்னிடம் உங்களை என்ன வேணுமானாலும் செய்து, நான் தப்பித்து விடுவேன், நான் வக்கீல் என்று சொன்னார், நாங்கள் பயந்து போய் கிடக்கிறோம்.

2. நானும், எனது அண்ணனும் எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை மேற்கொண்டோம். இந்த சம்பவம் தொடர்பாக நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரியல்ல, சரியாக தெரியாது. கையெழுத்து மட்டும் தான் போடுவேன். நான் மனையாத்துப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி குடும்பம் லட்சுமிபுரம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் ஊரிலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்ல கூடிய இடம் 1-1/2 முதல் 2 கி.மீ தொலைவில் இருக்கும். சம்பவம்

நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரிக்கு சொந்தமான பட்டா இடம் என்றால் சரியல்ல. அது எங்களுக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எந்த குடியிருப்புகளும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும், போர்வெல் உள்ள இடத்திற்கும் சுமார் 200 மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான்.

2. உழுதுக் கொண்டிருந்த இடத்திற்கும், மின்மோட்டார் இருந்த இடத்திற்கும் இடையே 250 மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின் போது, நான் என்னுடைய இடத்தில் தண்ணீர் பாய்ச்சு கொண்டிருந்தேன். எனக்கும், என் அண்ணனுக்கும் பாகம் பிரிக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான். என் அண்ணனும், என் அண்ணன் மனைவியும் அவர்களுக்கு பாகம் பிரிக்கப்பட்ட இடத்தில் உழுதுக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

3. என் அண்ணன் அடிவாங்க முடியாமல் கத்திய சத்தம் கேட்டு நான் சென்றேன். இன்றைய தினம் எதிரிகள் எங்கள் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.56/21 ல் CC.No.3/23 ல் நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகினோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் மீதும், என் குடும்பத்தார் மீதும் இரும்பு மண்வெட்டியால் எதிரியின் பின்தலையில் தாக்கியதாக எங்கள் மீது குற்றச்சாட்டு உள்ளது என்றால் அது பொய்யான குற்றச்சாட்டு. எதிரியின் குடும்பத்தினரை நாங்கள் தாக்கியதால் அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த உடன் உயிருக்கு பயந்துக் கொண்டு நாங்கள் வந்துவிட்டோம்.

4. சம்பவம் எந்த தேதி என்றால் 27.03.2021. சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஆதனக்கோட்டை காவல் நிலையத்திற்கு அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து பெருங்களூர் மருத்துவமனைக்கு 10 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சுமார் 4-1/2 மணி நேரம் கழித்து தான் மருத்துவமனைக்கு சென்றுள்ளோம் என்றால் வண்டி வந்த பின்னர் ஆதனக்கோட்டை காவல் நிலையம் சென்றோம், அங்கு மருத்துவமனை செல்ல சொன்னதால் பின்னர் மருத்துவமனை சென்றேன். ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து சென்றோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் பெருங்களூர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

5. புகார் வாக்குமூலத்தை நான் எழுதவில்லை என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்பது

எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் ஆதனக்கோட்டை காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். போலீசார் சம்பவத்தன்று என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான், மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள்.

6. சம்பவ இடம் தார்சாலைக்கு அருகே உள்ள வயல். சம்பவ இடம் நஞ்செய் நிலம். சம்பவத்தின் போது கடலை பயிர் செய்திருந்தோம். நான், என் அண்ணன், அண்ணன் மகன், என் மனைவி ஆகியோர் அனைவரும் சேர்ந்து எதிரியை தாக்கிவிட்டு, எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வீட்டில் அவர் ஒருவர் என்பதால் நான் அவரை கொலை செய்ய முயற்சி செய்து, என் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. எதிரி வழக்கறிஞர், அவர் என்னை மிரட்டினார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சம்பவத்திற்கு முன்னிட்டு எதிரி குடும்பமும், நாங்களும் பேச்சுவார்த்தையில் இல்லை என்றால் சரியல்ல, பேச்சுவார்த்தையில் இருந்தோம்.

7. எதிரி என் மீது கொடுத்த புகாரின் பேரில் எத்தனை நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்தேன் என்றால் 15 நாட்கள் இருந்தேன். நான் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 3 நாட்கள் இருந்தேன். எனக்கு உட்புற, வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, உட்புற காயங்கள் இருந்தது. மருத்துவமனையில் என்னை எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லி உள்ளேன். எனக்கு எவ்வித காயங்களும் இல்லை என்றாலும், வழக்கிற்காக நான் மருத்துவமனையில் படுத்துக் கொண்டு, எதிரி மீது பொய் புகார் கொடுத்து உள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**CC.NO-12/2022**

**List of Witness LW3 Examined as PW2 (Victim)**

| Name | பெருமாள் | Caste: | |
|---|---|---|---|
| Father's name | சின்னத்தம்பி | Calling: | விவசாயம் |
| Village | பெருங்களூர் | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 45 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05/04/2023.

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனக்கு பக்கத்து ஊர். 27.03.2021 ம் தேதி மதியம் 4, 4.30 மணியளவில் நானும், எனது மகன் ஸ்ரீதரும் உழுது கொண்டிருந்தோம். ஒரு ஓட்டம் என் மகன் உழுதார், நான் வறப்பில் நின்று கொண்டிருந்தேன், அப்போது கருப்பையாவும், சின்னுவும் வந்து, யார் வீட்டு சொத்தை யார்டா உழுவது என்று உம்மால ஒழுக்க, ஊர்ல ஒழுக்க என்று அசிங்கமாக பேசி நிக்காதே, உழுவ கூடாது என்று, வெட்டி புதைப்பேன் என்றும், ஊர் விட்டு வந்து உனக்கு இவ்வளவு அதிகாரமா என்று இருவரும் மண்வெட்டியால் குத்துவது போல் வந்தார்கள். நான் தனியாக இருக்கிறோம் என்று லேசாக நகர்ந்தேன், அப்போது என்னை மண்வெட்டியால் நெற்றியில் கருப்பையா ஓங்கி குத்தினார். எனக்கு இரத்தம் வந்தது, நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். அதன் பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. அ.சா.1 என் தம்பி. என் குடும்பத்திற்கும், எதிரி குடும்பத்திற்கும் நீண்ட காலமாக இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். இடம் சம்மந்தமாக எங்களுக்குள் சம்பவத்திற்கு முன்பிருந்தே பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். எதிரி லட்சுமிபுரத்தை சேர்ந்தவர் என்றாலும், நான் மணவாத்திகுடி கிராமத்தை சேர்ந்தவர் என்றாலும் சரிதான். சம்பவ இடத்திற்கும், மணவாத்திக்குடி கிராமத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 1-1/2 கி.மீ இருக்கும்.

2. சம்பவம் நடந்த இடம் லட்சுமிபுரத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் தான் எதிரிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான், என் மனைவி, என் தம்பி, என் மகன், என் தம்பியின் மனைவி அனைவரும் எதிரியின் பின்தலையில்

மண்வெட்டியால் அடித்து, காயம் ஏற்பட்டு, எதிரிகள் புகார் கொடுத்து, நாங்கள் அந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகின்றோம் என்றால், நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன் எனக்கு தெரியாது, நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது, ஆஜராகி வருகிறோம்.

3. எனக்கும், என் தம்பிக்கும் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான், என் கொல்லையில் தான் நான் உழுது கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் மட்டும் தனியாக இருந்ததால் எதிரிகள் தாக்கிவிடுவார்கள் என்று ஓட முயற்சித்தேன் என்றால் சரிதான். என்ன சம்பவம் நடந்தது என்று நான் சொல்லி தான் என் தம்பி நமச்சிவாயத்திற்கு தெரியும் என்றால் என் தம்பி தான் என்னை மருத்துவமனைக்கு தூக்கி சென்றார்.

4. எதிரி சின்னுவிற்கு வயது எவ்வளவு இருக்கும் என்றால் 60. சம்பவ இடத்திற்கு அருகே எந்த குடியிருப்புகளும் இல்லை என்றால் சரிதான். நான் உழுத இடத்திற்கும் மோட்டார் பம்புசெட் இருந்த இடத்திற்கும் இடையே சுமார் அரை கி.மீ தொலைவு இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து பெருங்களூர் மருத்துவமனைக்கு 5 நிமிடங்களில் சென்று விடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று பெருங்களூர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான், புதுக்கோட்டை மருத்துவமனைக்கு சென்றேன். புகாரை யார் கொடுத்தது என்றால் நான் தான் கொடுத்தேன். புகாரை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதி கொடுத்தேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான்.

5. முதல் விசாரணையில் சொல்லப்பட்ட விவரங்கள் நான், என் தம்பி, என் மனைவி, என் மகன் ஆகியோர் கலந்து ஆலோசனை செய்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் என்னை மண்வெட்டியால் வெட்டினார், குத்தினார். மண்வெட்டியால் வெட்டினார், குத்தினார் என்பதை நான் என் போலீசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. மருத்துவ சான்றின் அடிப்படையில் எனக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் மண்வெட்டியால் குத்தினார். அசிங்கமாக பேசியதாக சொல்லப்பட்ட வார்த்தைகளை என்னுடைய போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் அவ்வாறு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், வழக்கின் தோதிற்காக தற்சமயம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சையில் இல்லை என்றால் சரியல்ல.

7. இந்த வழக்கிற்கு பின்னிட்டும், என் மீது இந்த எதிரியால் புகார் கொடுக்கப்பட்டு, என் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பிணையில் உள்ளேன் என்றால் சரிதான்.

8. எந்த தேதி, எந்த மாதம், எந்த பெயர் கொண்ட காவல் அதிகாரி என்னை விசாரித்தார் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் என்னை விசாரிக்கவில்லை. என் மகன் சம்பவத்தின் போது, டிரக்கில் தான் இருந்தார், டிரக்கை விட்டு இறங்கவில்லை என்றால் சரிதான், உழவு செய்து கொண்டிருந்த டிரக்கும் ஓடி கொண்டு தான் இருந்தது என்றால் சரியல்ல, பயத்தில் நிறுத்திவிட்டோம். முதல் விசாரணையில் சொல்லி உள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், வழக்கின் தோதிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சிலம்பாயி, சரிதா ஆகியோர் கையில் ஆயுதம் வைத்துள்ளார்களா என்றால் சிலம்பாயும், சரிதாவும் அசிங்கமாக பேசினார்கள், கையில் சின்னுவும், கருப்பையாவும் ஆயுதம் வைத்திருந்தார்கள். சின்னுவும், கருப்பையாவும் என்ன என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்றால் இருவரும் ஆளுக்கொரு மண்வெட்டி கையில் வைத்திருந்தார்கள். அவர்கள் மண்வெட்டி வைத்திருந்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் போலீசார் அதனை எழுதிக் கொள்ளவில்லை.

9. நானும், என் குடும்பத்தாரும் சேர்ந்து கருப்பையாவை வெட்டி அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றாலும், அவர் கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக என் குடும்பத்தில் இருந்தவர்கள் அனைவரும் மருத்துவமனைக்கு சென்றோம் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-12/2022**

**List of Witness LW4 Examined as PW3 (Victim)**

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வி | Caste: | |
| Husband name | பெருமாள் | Calling: | விவசாயம் |
| Village | பெருங்களூர் | Religion: | Hindhu |
| Taluk | புதுக்கோட்டை | Age: | 35 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05/04/2023.

முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். தேதி எனக்கு தெரியவில்லை, சுமார் 3 வருடங்களுக்கு முன்பு வீட்டிற்கு சமைக்க வந்துவிட்டேன். சண்டை நடந்து முடிந்துவிட்டது, என் சின்ன மகன் ஸ்ரீகாந்த் போன் செய்தான், நான் வந்து பார்த்தபோது சண்டை முடிந்துவிட்டது. நான், என் மகன், என் கொழுந்தன் ஆகியோர் என் கணவரை அழைத்துக் கொண்டு வந்துவிட்டோம். என் கணவருக்கு புருவத்திற்கு மேல் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. சம்பவம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லப்பட்ட விவரங்கள் ஸ்ரீகாந்த் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்தில் என் கணவர், என் கொழுந்தன் நமச்சிவாயம், என் மகன் ஆகியோர் தாக்கி எதிரி கருப்பையா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். எதிரி கருப்பையாவிற்கு என்ன காயம் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.